DINAMALAR

DATE: 23/06/23

PAGE NO: 04

# பயோஎத்தனால் ரிபைனரி மாதிரி புதுச்சேரி பல்கலைக்கு 2 காப்புரிமை

**புதுச்சேரி, ஜூன் 23–**

புதுச்சேரி பல்கலைக்கழக ஆராய்ச்சி குழு, பயோ எத்தனால் ரிபைனரி மாதிரியை உருவாக்கியதற்காக இரண்டு ஜெர்மன் காப்புரிமைகளை பெற்றுள்ளனர்

புதுச்சேரி பல்கலையின் பங்கல் பயோடெக்னாலஜி ஆய்வகத்தின், பயோடெக்னாலஜி ஆராய்ச்சியாளர்கள் குழு, வணிக அளவிலான மாற்று எரிபொருள் உற்பத்திக்கான உயிர்வேதியியல் பொறியியல் மற்றும் பூஞ்சை இன் விட்ரோ பயோ மாற்றம் ஆகிய பகுதிகளில் இரண்டு ஜெர்மன் காப்புரிமைகளைப் பெற்றுள்ளனர்.

இக்குழுவிற்கு துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், பேராசிரியர் வெங்கடேஸ்வர சர்மா, பேராசிரியர்கள் சுதா ராணி,ரெங்கநாதன் ஆகியோர் வழிகாட்டியுள்ளனர்.



புதுச்சேரி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு, பயோ எத்தனால் ரிபைனரி மாதிரியை உருவாக்கியதற்காக இரண்டு ஜெர்மன் காப்புரிமைகளை பெற்றுள்ளது. ஆராய்ச்சி குழுவினரை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

இந்த குழுவில் நவநீத் குமார் ராமமூர்த்தி, ரேவந்த் பாபு பள்ளம், வினோத், ஷோவன் ரஷித், விக்னேஷ் ஆகியோர் பணியாற்றினர். பல்கலையின் உயிரி எரிபொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு, பிரதமர் மோடியின் எரிபொருட்களில் 20 சதவீதம் எத்தனாலைக் கட்டாயம் கலக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்குகேற்ப இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளனர்.

ஆராய்ச்சியாளர்கள் எத்தனால் தயாரிக்க பல்கலை வளாகத்தை சுற்றியுள்ள தாவரக் கழிவுகள் மற்றும் காகித கழிவுகளை சேகரித்துள்ளனர். இதன் மூலம் ஆராய்ச்சி குழு உள்நாட்டு எத்தனால் உற்பத்தியை உருவாக்கி வருகிறது.

தற்போது இக்குழு, பகுப்பாய்வு நுட்பங்களை எளிதாக்குவதற்கு ஒரு எளிமையான மொபைல் செயலியை உருவாக்க உள்ளது. அரசாங்கம் அல்லது நிதியளிப்புடன் சுய நிலையான, 2ஜி எத்தனால் சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க விரும்புவதாக பல்கலை ஆராய்ச்சியாளர்கள் குழுவினர் தெரிவித்தனர். ஆராய்ச்சிக் குழுவினரை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

DINAKARAN

PAGE NO: 14 DATE : 23.06.23

# 2 ஜெர்மன் காப்புரிமைகளை பெற்ற பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்

## துணை வேந்தர் குர்மீத் சிங் பாராட்டு



புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் குர்மீத் சிங் ஆராய்ச்சியாளரை பாராட்டினார்.

புதுச்சேரி, ஜூன் 23: புதுவை பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் பயோ-எத்தனால் ரிபைனேரி மாதிரியை உருவாக்கியதற்கு 2 ஜெர்மன் காப்புரிமைகளை பெற்றுள்ளனர். புதுவை பல்கலைக்கழகத்தின் ஃபங்கல் பயோடெக்னாலஜி ஆய்வகத்தின், பயோடெக்னாலஜி துறையின் ஆராய்ச்சியாளர்கள் குழு; வணிக அளவிலான மாற்று எரிபொருள் உற்பத்திக்கான உயிர்வேதியியல் பொறியியல் மற்றும் பூஞ்சை இன்-விட்ரோ பயோ-மாற்றம் ஆகிய பகுதிகளில் 2 ஜெர்மன் காப்புரிமைகளை பெற்றுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் குர்மீத் சிங்கின் தலைமையின் கீழ், பேராசிரியர் வெங்கடேஸ்வர சர்மா, ஆய்வாளர்கள் குழு மற்றும் ஒத்துழைப்பாளர்களான பேராசிரியர் சுதா ராணி மற்றும் பேராசிரியர் ரெங்கநாதன் ஆகியோர் ஆய்வு குழுவிற்கு வழிகாட்டியுள்ளனர்.இந்த குழுவில் டாக்டர்.நவநீத்குமார் ராமமூர்த்தி, ரேவந்த் பாபு பள்ளம், வினோத், ஷோவன் ரக்ஷித் மற்றும் விக்னேஷ் ஆகியோர் பணியாற்றினர்.

புதுவை பல்கலைக்கழகத்தின் உயிரி எரிபொருள் ஆராய்ச்சியாளர்கள் குழு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் எரிபொருட்களில் 20% எத்தனாலை கட்டாயமாக கலக்க வேண்டும் என்ற முன்மொழிற்விர்க்கேர்ப்ப இந்த தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளனர்.

ஆராய்ச்சியாளர்கள் எத்தனால் தயாரிக்க பல்கலைக்கழக வளாகத்தை சுற்றியுள்ள தாவரக்கழிவுகள் மற்றும் காகித கழிவுகளை சேகரித்துள்ளனர்.

அரசாங்கம் அல்லது நிதியளிப்புமுகவர் அல்லது தொழில்அதிபர்களின் ஸ்பான்சர்களின் கூடுதல் நிதியுதவியுடன், நம் நாடு மாற்று எரிபொருள் தேவையை பூர்த்தி செய்ய, “தொடர்ச்சியாக இயங்கக்கூடிய, சுய-நிலையான, 2G-எத்தனால் சுத்திகரிப்பு நிலையத்தை” உருவாக்க ஆராய்ச்சியாளர்கள் விரும்புகிறார்கள். புதுவை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் குர்மீத் சிங், ஆராய்ச்சி குழுவின் சாதனையை பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.